முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் கருவூர்தேவர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

04.03.2019, திங்கட்கிழமை

1. **யோகநாதனே அரங்கராசா**
**உயர்வான தருமபலம் கொண்டு**
**யுகமாற்றம் செய்ய வந்த தேசிகா**
**உலகத்தில் உன் வழி வரும் மக்கள்**

2. மக்களெல்லாம் ஞானிகள் அருளும்
மாண்புகளும் பெறுவரென கூறி
ஆக்கமுடன் நித்ய பிரசன்ன ஆசி
அருளுவேன் **விளம்பி சாலின் திங்கள்**

3. **திங்களிலே இருபான் திகதி சோமவாரம்**
**தேசிகனுக்கு கருவூர்தேவர் யானும்**
இங்கனமே உலகநலமுற உரைப்பேன்
இயம்பிட அரங்கன் தயவு பெறும்

4. தயவு பெறும் மக்கள் எல்லாம்
தனித்து வளர்ச்சி காண்பர்
தயவு தரும் அன்னதான நெறியை
தவராசன் உயர் நெறியாக செயல்படுத்த

5. செயல்வழி உலக மக்கள்
சேவையாக இணைந்து வர
தயவுபட தருமத்தில் பொருளுதவி
தானாக மக்கள் முன்வந்து செய்து

6. செய்துமே அரங்கா முருகாயென
செப்பிடுவேன் உலக மக்களெல்லாம்
அய்யமற செபதபம் செய்துவர
அனைவரும் சத்திய வழி நடக்க

7. நடக்கவே கலியுக சிக்கல்
நாட்டை விட்டு அகல நேரும்
இடரான பயம் வஞ்சமல்லல்
எங்கும் இல்லா விலக நேரும்

8. நேருமைபட அரங்கன் ஆசியுடன்
நிலவுலகில் பரவி தொண்டாற்றும்
ஆறுமுகன் சீடர்கள் வழியில்
அகிலமே மாற்றம் காண இருக்க

9. இருக்கவே காலம் தாழ்த்தா
ஏழாம் படை வீடு வந்திணைந்து
வருத்தமில்லா ஓர்மைபட மகிழ்வுற
வணங்கி வணங்கி அரங்கமகானை

10. மகானை ஞானத்தலைவனாக
மக்களெல்லாம் ஏற்று வர
வகைபட கலியுகம் தேறும்
வல்லமையான உலகாக மாறும்

11. மாறுதலை செய்ய வந்த அரங்கா
மாற்றம் தரும் உன் தீட்சை
ஆறுமுகா என ஏற்பவர் தேறுவர்
அறிவித்த நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் கருவூர்தேவர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

யோகங்கள் எல்லாம் வெற்றி கண்டிட்ட யோகநாதனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே உயர்வுமிக்க தர்மபலத்தினை அளவிலாது தர்மங்கள் செய்து பெற்று, தர்மபலம் கொண்டு யுகமாற்றத்தை செய்ய வந்திட்ட ஞானதேசிகனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே உலகினில் அற்புதமான உமது தூய ஞானநெறிகளை ஏற்று பின்பற்றி வருவோர் எல்லாம் ஞானிகளின் அருளையும், மாண்புகளையும் பெறுவார்கள் எனக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் மாசி மாதம் 20ம் நாள் 04.03.2019, திங்கட்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே கருவூர்தேவர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் கருவூர்தேவர்.

உலகினில் ஆறுமுக அரங்கமகா தேசிகனை பணிந்து போற்றி வணங்கி அரங்கரின் தயவினை பெறுகின்ற மக்களெல்லாம் தனித்துவம்மிக்க வளர்ச்சியினை காண்பார்கள். தயவு பண்பினை தந்தருளும் அன்னதான நெறியினை உயர்நெறியாகக் கொண்டுமே அரங்கமகா தேசிகனும் உலகில் செயல்பட, உலக மக்கள் எல்லாம் அரங்கனின் அன்னதான சேவைகளில் கலந்து தொண்டுகள் செய்தும் பொருளுதவிகள் செய்தும் வருவதுடன் தானாக முன்வந்து அரங்கனின் தருமங்களிலே சேவைகளை செய்திட வேண்டும்.

அரங்கனின் அன்னதான சேவைகளையும், தானதருமப் பணிகளையும் தமது பணியென தானாக முன்வந்து ஏற்று செய்வதுடன் அரங்கனே முருகன் என்றும், முருகனே அரங்கன் என்றும் சந்தேகம் இன்றி ஏற்றுக் கொண்டு அரங்கமகா தேசிகா முருகா என மக்களெல்லாம் தினம்தினம் மறவாமல் ஜெபதபங்களை செய்து வருவதுடன் அனைவரும் அரங்கனின் சத்தியநெறிகளை ஏற்று பிறழாமல் அதன்வழி தூய்மையுடன் நடந்திட கலியுக சிக்கல்களெல்லாம் நாட்டை விட்டே அகன்று ஓடும். நாட்டினில் வேறெங்கும் கலியுக துன்பமே இல்லாத அளவிற்கு விலகிடும்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஆசிகளைப் பெற்று உலகமெங்கும் சென்று நேர்மையுடன் தொண்டுகள் செய்கின்ற அரங்கனின் சீடர்கள் மூலமாக உலகமே உலகப் பெருமாற்றத்தை காண இருக்கின்றது. ஆதலினால் உலக மக்களே இனியும் காலம் தாழ்த்தாமல் வல்லமைமிக்க ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை நாடி வந்து அரங்கனின் அறப்பணிகளை தமது பணிகளாக ஏற்று அரங்கனுடன் இணைந்து தன்னலமற்ற தொண்டுகளை தூய்மையுடன் செய்து அரங்கனின் சீடர்களுடன் ஒன்றிணைந்து பேதாபேதமற்று எல்லோரும் ஒற்றுமையுடன் இணைந்து ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை ஞானத்தலைவனாக ஏற்றுக் கொண்டு அரங்கமகா தேசிகனே எங்கள் குலகுரு, குலதெய்வம் என போற்றி வணங்கிட வணங்கிட இந்த கலியுகமும் அரங்கன் அருளால், முருகப்பெருமான் கருணையால் ஞானிகள் துணையால் அரங்கனின் சீடர்களாகிய உங்கள் மூலம் வல்லமைமிக்க ஞானஉலகமாக மாற்றம் அடையும்.

**உலகின் அற்புதமான பெருமாற்றங்களை செய்யவே முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட அரங்கமகா தேசிகனே மாற்றங்களை தந்தருளும் உமது ஞான தீட்சைகளை உளம் உருகி பணிவுடன் பயபக்தியுடன் முருகப்பெருமானே ஞானஉபதேசம் அளிப்பதாய் எண்ணி ஏற்று தாம் கூறும் தீட்சை உபதேசம் வழி நடந்திடுபவர்கள் கடைத்தேற்றம் பெறுவார்கள்** என தமது நித்ய பிரசன்ன ஆசி நூல் மூலம் உலகறியக் கூறுகின்றார் மகான் கருவூரார்.

–சுபம்–